# சங்ககாலத் தமிழர்களின் வாழ்க்கை முறை: ஓர் ஆய்வு

**முனைவர் மா. கலாமணி**
கோபி

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

### முன்னுரை

தமிழகத்து வரலாற்றுக்குட்பட்ட சங்க காலத்தில் தமிழரின் நாகரிகம், முழு வளர்ச்சியுற்றிருந்தது. தமிழகத்தை மூவேந்தர்களாகிய சேரர், சோழர், பாண்டியர் என்ற முப்பெரும் மன்னர்கள் அரசாண்டனர். சேரர் வஞ்சியையும், சோழர் காவிரிப்பூம்பட்டினத்தையும், பாண்டியர் மதுரையையும் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். சிறிய நிலப் பரப்பைச் சிற்றரசர்களும், குறுநிலமன்னர்களும், கடையெழு வள்ளல்களும் ஆண்டு வந்தனர். அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சங்க இலக்கியங்களான எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் எடுத்தியம்புகின்றன இத்தொகை நூல்கள் மூலம் பண்டைத் தமிழர்களின் பண்பாடு, நாகரிகம், கொடை, கல்வி போன்றவற்றை அறிந்துகொள்ள முடிகிறது. தொன்மையும், வரலாற்றுப் பெருமையும், நாகரிகச் சிறப்பும்கொண்ட தமிழ் இனத்திற்குச் தனிச் சிறப்பு உண்டு. அச்சிறப்புப் பற்றிய பழந்தமிழரின் வாழ்க்கையைப்பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### தமிழர் பண்பாடு

அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்ற இல்லறம், உண்பது நாழி உடுப்பது இரண்டே என்னும் எளிய வாழ்க்கை, செல்லிருந்து ஓம்பி வருவிருந்து எதிர்பார்க்கும் உயர்பண்பு, களிறெறிந்து பெயர்த்தல் காளைக்குக் கடனே என்ற வீரம், அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்னும் தூய அன்பு, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலகப் பொதுமை போன்ற தன்னேரில்லாத பண்புகளோடு உயர்ந்திருந்தது தமிழர் சமுதாயம். தமிழர் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே பண்பாட்டிலும், நாகரிகத்திலும் சிறந்திருந்தனர் என்பதனைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்ந்து வந்தனர்.

### நிலப் பாகுபாடு

மக்கள் தாம் வாழும் இடங்களுக்கு ஏற்ப வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொண்டனர். சங்ககாலத்தில் நாடானது நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு அந்நிலத்தின் வழியே மக்களும் தங்களது வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தனர். குறிப்பாகக் காடும் காட்டைச்

சார்ந்த இடத்தை முல்லை என்றும், மலையும் மலை சார்ந்த இடத்தை குறிஞ்சி என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடத்தை மருதம் என்றும், கடலும் கடலைச் சார்ந்த இடத்தை நெய்தல் என்றும் பிரித்து அந்நிலத்தை ஒட்டியே வாழ்ந்து வந்தனர். நிலத்தை ஒட்டி வாழ்ந்த சங்ககால மக்கள் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுத்துக்கொள்ளாமல் அவர்களுடைய வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் வகுத்துக்கொண்டு வாழ்ந்த பெருமைக்குரியவர் ஆவர்.

| **திணை** | | **கடவுள்** |
|---|---|---|
| குறிஞ்சி | - | முருகன் (சேயோன்) |
| முல்லை | - | திருமால் (மாயோன்) |
| மருதம் | - | இந்திரன் |
| நெய்தல் | - | வருணன் |
| பாலை | - | கொற்றவை |

பண்டைத் தமிழா் தங்களுக்குரிய தெய்வத்தை வழிபட்டனர். வெற்றியைக் கொண்டாட கொற்றவை என்னும் பெண் தெய்வத்தை வணங்கும் மரபிருந்தது. இயற்கைப் பொருள்களான கதிரவன், நிலம், நெருப்பு முதலானவற்றையும் வணங்கினார்கள்.

**காலப் பாகுபாடு**

நிலத்தைப் பாகுபாடு செய்ததைப் போலவே காலத்தையும் பாகுபாடு செய்திருந்தனர். காலம், பெரும்பொழுது என்றும், சிறுபொழுது என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டது. ஓராண்டின் மாதங்களை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என ஆறாகப் பிரித்து அவற்றைப் பெரும்பொழுது என்றனர். ஒரு நாளின் பொழுதை காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம், வைகறை என ஆறாகப் பிரித்து அவற்றைச் சிறுபொழுது என்றனர். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நான்கு திணைகளில் வாழ்ந்த மக்கள் உழைத்துப் பொருளீட்டுவர். காதலிப்பர், மணப்பர், இல்லறத்தில் நின்று இன்பம் துய்ப்பர். இவ்வொழுக்கங்கள் யாவும் மக்களுக்கே உரியன. எனவே, அவற்றுக்கு உரிப்பொருள் எனப் பெயரிட்டனர்.

**பழக்கவழக்கங்கள்**

பழந்தமிழ் மக்கள் தீ மூட்டக் கல்லை உரசுவது, நேரத்தையும், காலத்தையும் நிலவு, விண்மீன்கள், கோள்கள், மலர்கள் பூக்கும் வேளை ஆகியவற்றைக்கொண்டு கணக்கிடுவது, இறந்தோரை முதுமக்கள் தாழியில் இட்டுப் புதைப்பது, விருந்தினரை வீட்டிற்கு வெளியே வந்து வழியனுப்புவது போன்ற பழக்கங்கள் இருந்தன. நண்பனுக்குத் துன்பம் என்றால் உயிரைக்கூட கொடுக்கத் தயங்காதவர்கள் பண்டைத் தமிழர்கள்.

வீரமுடன் செயல்பட்ட வீரர்களுக்கு நடுகல் வழிபாடு செய்யும் வழக்கமும் இருந்தது.நடுகல்லில் போரில் வீர மரணம் எய்திய வீரனது உருவம், பெயர், பெருமைக்குரிய செயல் முதலியவற்றைப் பொறிக்கும் பழக்கம் இருந்தது.

**வழிபாட்டு முறை**

பழந்தமிழர் பல்வேறு விழாக்களைக் கொண்டாடியுள்ளனர். நிலவு, மழை, ஒளி, பாம்பு, பசு முதலிய இயற்கைப் பொருட்களை வழிபாடு செய்தனர். பண்டையத் தமிழர் பயிர்த்தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்ததால் அதற்கு உதவும் கதிரவன், மழை ஆகிய இயற்கைப் பொருட்களை வழிபட்டனர். அரசமரம், வேப்பமரம் ஆகியவற்றை வணங்கினா். ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனித்

தெய்வங்கள் உண்டு. அதனைக் குலதெய்வம் என்றும் கூறுவர். வீட்டில் துன்பம், நோய் ஏற்படும்பொழுது தெய்வத்தை வழிபடுவர். குலதெய்வத்தின் பெயரைக் குழந்தைகளுக்குச் சூட்டி மகிழ்வர்.

**கடவுள் வழிபாட்டின் நோக்கம்**

மழை பெய்யவும், நோய் நீங்கவும், பிள்ளைப்பேறு கிடைக்கவும், பேய் விலகவும், எடுத்த காரியம் நிறைவேறவும், உயிர் நன்மை கருதியும், கலைகளின் வளர்ச்சிக்கும், சமுதாய ஒற்றுமைக்கும் விழாக்கள் கொண்டாடப்பட்டன. இறைவழிபாடு என்பது அச்சத்தில் தொடங்கியது. ஆரவாரத்தில் வளர்ந்தது. அன்பால் முதிர்ந்தது. சிறுதெய்வ வழிபாட்டை ஆராய்ந்தால் பண்டைத் தமிழரின் பண்பாட்டை நன்கு அறியலாம்.

**விழாக்கள்**

மனித சமுதாயம் ஒருங்கிணைந்து கொண்டாடுவன திருவிழாக்கள். மக்கள் தங்கள் மனநிறைவுக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், பயன்விரும்பியும் விழாக்களைக் கொண்டாடுகின்றனர். விழாக்களில் சில தொழில் சார்ந்தவை, சில மதம் சார்ந்தவை. பண்டைத்தமிழர் பல்வேறு விழாக்களைக் கொண்டாடியுள்ளனர். தைத்திங்கள் நோன்பு, தை நீராடல், கார்த்திகைத் திருநாள், திருவாதிரை விழா, வேலன் வெறியாட்டு விழா, இளவேனில் விழா போன்ற விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடினர் என்பதை அகநானூறு, கலித்தொகை, பரிபாடல் முதலிய இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

**ஆடை அணிகலன்கள்**

பண்டைத் தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை நிலங்களில் வாழ்ந்த மக்கள் பூவையும், தழையையும் கோத்து ஆடையாக அணிந்திருந்தனர். அவர்கள் கம்பளி ஆடைகளையும் அணிவதுண்டு. உயர் குடியில் பிறந்த ஆண்மக்கள் இடையில் வேட்டியும், மேலாடையும் அணிவர். சிலர் சட்டை அணிவதும் உண்டு. அரசரும் அவர்கள் பணியாளர்கள் மட்டுமே சட்டை அணிவர். இச்சட்டைக்கு ‘குஞ்சுகம்’ என்று பொருள். பெண்கள் இடையில் புடவையை அணிந்திருந்தனர். மார்பகத்தை ஆடையால் மறைக்கும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. துணிகளுக்கு வண்ணமேற்றும் பழக்கத்தையும் அறிந்திருந்தனர். துணி தைக்கும் பழக்கமும் இருந்தது. துணி துவைப்பவர் ‘துன்னக்காரர்’ எனப்பட்டார். சிறுவர்கள் ‘ஐம்படைத்தாலி’ என்னும் கழுத்தணி அணிந்திருந்தனர்.

**பொழுதுபோக்கு, விளையாட்டுக்கள்**

ஐவகை நிலங்களுள் ஒன்றான முல்லை நிலத்தில் ஏறுதழுவுதல் என்ற வீரவிளையாட்டு நடைபெற்றது. இது இப்போது ‘ஜல்லிக்கட்டு’, மஞ்சு விரட்டு’ என்று அழைக்கப்படுகிறது. ஆண்மகனின் வீரத்தைப் புலப்படுத்துவதற்காக இவ்விளையாட்டு அமைந்தது. காளையை அடக்கும் வீரனையே அக்காலப் பெண்கள் மணந்தனர். பண்டைக் காலத்தில் கோழிச் சண்டையும், ஆட்டுக்கிடாய்ச் சண்டையும் நடைபெற்றதாகச் சங்கஇலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. யானைச் சண்டை நடைபெறுவதும் வழக்கத்தில் இருந்துள்ளது. நகர்ப்புற மக்கள் மேடை அமைத்து இசை, நாட்டியம், நாடகம் ஆகியவற்றைக் காண்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர். பெண்கள் கழங்காடல், அம்மானை, பந்தாடல், ஓரையாடுதல் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டனர்.

### உணவு முறை

உயிர் காக்கும் அமுதம் ‘உணவு’ என்பதனை அறிந்தோர் பழந்தமிழர். அவர்களது உணவு இயற்கை உணவாகவும், சத்துள்ளதாகவும், உடலைப் பேணுவதாகவும், சிறந்த மருந்தாகவும் அமைந்திருந்தது. இல்லற வாழ்வில் அமர்ந்து வருவிருந்து ஓம்புதல் பண்டைத் தமிழரின் தனிப்பட்ட பண்பாடாகும். அவர்கள் அமிழ்தம் கிடைத்தாலும் அதைப் பகிர்ந்து உண்பர். உணவு அரிசிச் சோற்றை பண்டைத் தமிழர் சிறப்பு உணவாகக் கொண்டனர். அவர்கள் புழுங்கலரிசியையே உண்பது வழக்கம். பண்டைத் தமிழகத்தில் ஊன் உண்ணும் வழக்கம் பரவியிருந்தது. பார்ப்பனரும் ஊன் உண்டதற்குச் சான்றுகள் உண்டு. கள்ளுண்ணும் வழக்கம் விரிவாகக் காணப்பட்டது. மன்னர், பாணர், புலவர், கூத்தர், பொருநர், விறலியர் அனைவருமே மதுவுண்டு களித்தனர்.

### திருமண முறை

பழந்தமிழர் தம் வாழ்வை அகம், புறம் எனப் பிரித்தனர். அகவாழ்வைப் பாடுவதுஅன்பின் ஐந்திணை எனப்பட்டது. மணநிகழ்வின் போது மணமக்களை நெல்லும் மலரும் கலந்த நீரால் நீராட்டி தூய ஆடை அணிகலன்களை அணிவித்தனர். மணமுழவு ஒலிக்க மணமகளைத் தலைவனிடம் தந்து மூத்தோர் வாழ்த்துரை வழங்கினர்.

### கல்வி

திருக்குறளில் கல்வி, கேள்வி, அறிவுடைமை போன்ற அதிகாரங்கள் அக்காலக் கல்வியின் சிறப்பை விளக்குவன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் கல்வியின் சிறப்பு பலவிடங்களில் விளக்கப்பட்டுள்ளது. எண்ணும் எழுத்தும் கண்ணெனப் போற்றப்பட்டன. அக்காலத்தில் கல்வி கற்கும் இடங்களான மரத்தடியும், ஊர் மன்றமும், ஆசிரியர் வீடும், வீட்டுத்திண்ணைகளும் அமைந்திருந்தன. பனை ஓலையால் எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கம் இருந்தது.

### தொழில்கள்

தமிழ்ச் சமூகத்தின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கக் கூடிய பல்வேறு தொழில் பிரிவினர் இருந்தனர். தச்சுத் தொழில் மேலோங்கி இருந்தது. தேர், வண்டி, நாவாய்கள், படகுகள், வீடுகளுக்கான தூண்கள், கதவுகள், கட்டில்கள் முதலான பொருள்கள் செய்யப்பட்டன. மீன்பிடித் தொழில் பற்றிய குறிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. உழவுத் தொழில் பெரும் தொழிலாக இருந்தது.

### கலைகள்

இசை, நாட்டியம், நாடகம், ஓவியம், சிற்பம் போன்ற பல்வேறு கலைகள் அக்காலத்தே செழித்திருந்தன. அவற்றுக்கான நூல்களும் இருந்தன. ஐவகை நிலத்திற்கும் தனித்தனியே பண்வகை, யாழ், பறை போன்றவை இருந்தன. பல்வேறு இசைக் கருவிகளைப் பயன்படுத்தினர். பாணன், பாடினி போன்ற இசைக்கலைஞர்கள் சிறப்புப் பெற்றிருந்தனர். தமிழர் போற்றி வளர்த்த கலைகளுள் கூத்துக் கலையும் ஒன்று. கூத்தர், விறலியர் முதலிய கலைஞர் பலர் இருந்தனர். மன்னனுக்குரிய கூத்து வேத்தியல் என்றும், மற்றவர்களுக்குரியவை பொதுவியல் என்றும் அழைக்கப்பட்டன. கூத்துக்கலை போலவே நாடகக்கலையும் மக்களிடையே சிறப்பிடம் பெற்றிருந்தது.

### முடிவுரை

பழந்தமிழர் மக்கள் அனைவரையும் உறவினராய் எண்ணி வாழ்ந்தனர்; உயிர்கள் அனைத்தையும் தழுவி நிற்கும் உயர்ந்த பண்புடன் திகழ்ந்தனர்; இயற்கை அறிவியலில் சிறந்திருந்தனர். தாவரத்திற்கும் உயிருண்டு என்பதனை நீண்ட காலமாக அறிந்திருந்தனர். மரபும், தொழில்நுட்பமும், தொன்மையும் கலைப்பண்பாட்டுக் கூறுகளுடன் பழந்தமிழர் இயற்கையுடன் இயைந்த சமூகமாக வாழ்ந்தனர்.